## இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் - 2014

------------------------------------------------------------------------

இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய வெளிப்படுத்தல் தகல்வல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது அவதானிப்புகளும் கருத்துரைகளும் இந்த அறிக்கையில் காட்டப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு மீளாய்வாண்டில் ரூபா 15,700,000 பெறுமதியுடைய இரண்டு வாகனங்களை உரிமை மாற்றத்துடன் பல்கலைக்கழகத்திற்கு அன்பளிப்புச் செய்திருந்தது. இருப்பினும், அந்த வாகனங்களின் பெறுமதி கணக்குகளிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெளிவாரி பட்டக் கற்கை நெறிகள் மற்றும் முதுகலைப் பட்ட படிப்புக்கள் என்பவற்றை நடாத்தி மீளாய்வாண்டில் ரூபா 2,005,793 தேறிய வருமானமொன்றை பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டங்கள் மற்றும் தொழில்சார் கற்றல் பிரிவு நிலையமும் (சீஈடீபிஎல்) பட்டப்பின் படிப்பு பிரிவுகளும் ஈட்டியிருந்தன. எவ்வாறாயினும், அப் பிரிவுகளின் கொடுக்கல்வாங்கல்கள் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களுடன் ஒன்றிணைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பல்கலைக்கழகம் பயன்படுத்த முடியாத பொருட்களை மீளாய்வாண்டில் ஏலத்தில் விற்பனை செய்திருந்தது. இருந்த போதிலும், பொருட்கள் வழங்கப்பட்டிருந்த ஆட்களிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 125,350 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா 816,670 பெறுமதியுடைய நுகர்வுப் பொருட்கள் மற்றும் உயிரியல் விஞ்ஞான திணைக்களத்தின் இரசாயனங்களின் இருப்பு மீதிகள் என்பன நிதிக்கூற்றுக்களிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை.

(உ) பூரணப்படுத்தப்பட்டு பல்கலைக்கழத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த நிர்மாண வேலைகள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த சிட்டைகளிற்காக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 23,567,604 தொகையினை பல்கலைக்கழகம் ஒப்பந்தக்காரர்களிற்கு செலுத்தவேண்டியிருந்தது. இருப்பினும், இத் தொகை நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்களாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பதவிகள் வறிதாக்கப்பட்ட 06 கல்விசார் பதவியணியினருடன் தொடர்புடைய ரூபா 843,123 தொகையான பதவியணியினர் கடன் மீதிகள் 03 முதல் 15 ஆண்டுகள் வரையான கால வீச்சில் நிலுவையாகக் காணப்பட்டன. இருப்பினும், அந்த நிலுவையான மீதிகளை

அறவிடுவதற்கு கணக்காய்வுத் திகதியான 2015 ஏப்ரல் 30 வரையிலும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிற்கான தாபனவிதிக் கோவை | |
| (i) X ஆம் அத்தியாயத்தின் 23 ஆம் பிரிவு | கல்விசார் பதவியணியினரால் எடுக்கப்பட்ட விடுமுறைகள் தொடர்பாக பல்கலைக்கழகம் விடுமுறைப் பதிவேடொன்றை பேணியிருக்கவில்லை. |
| (ii) X ஆம் அத்தியாயத்தின் 20.6 ஆம் பிரிவு | கல்வி சார் மற்றும் கல்வி சாராத பதவியணியினரால் எடுக்கப்பட்ட சம்பளமற்ற விடுமுறைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு படிவம் பொது 96 இல் மாதாந்தம் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) இல. 102 முதல் 104 வரை | (i) பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான ஐந்து வாகனங்கள் விபத்துக்குள்ளாகி ரூபா 2,699,793 செலவில் மீளாய்வாண்டில் திருத்தப்பட்டிருந்தன. இருப்பினும், விபத்துக்கான காரணங்களையும் ஏற்பட்ட இழப்புக்களையும் மதிப்பிட்டு பொறுப்பினை சுமத்தவதற்காக விசாரணைகளை நடாத்துவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>(ii) 2013 இல் நடாத்தப்பட்ட மெய்மையாய்வுச் சபை ரூபா 37,042,983 மொத்தக் கிரயம் கொண்ட 2,477 நிலையான சொத்து விடயங்களில் குறைவுகளை வெளிப் படுத்தியது. இருப்பினும், அந்த விடயங்களின் கிரயம் இழப்புக்கான காரணங்கள் மற்றும் பொறுப்பினை சுமத்தவதற்கான விசாரணை களை மேற்கொள்வதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்படாது கணக்குப் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் தொழிற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 600,833,150 தொகையான மீண்டெழும்

செலவினத்திற்கான அரசாங்க மானியத்தை கருத்திற்கொள்ள முன்னர் ரூபா 756,883,336 தேறிய பற்றாக்குறையொன்றானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 577,710,687 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 179,172,649 ஆன மேலுமொரு வீழ்ச்சியை காட்டுகின்றது. ஏனைய வருமானம் ரூபா 2,560,479 ஆல் அதிகரித்திருந்தமைக்கு எதிராக செலவினம் ரூபா 181,733,128 ஆல் அதிகரித்திருந்தமையே இந்த வீழ்ச்சிக்குப் பிரதானமாக பங்களித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தின் கல்விச் செயலாற்றல் பின்வருமாறு காணப்படுகின்றது.

#### (அ) பட்ட கற்கை நெறிகளை நடாத்துதல்

மீளாய்வாண்டிலும் கடந்த இரண்டு ஆண்டுகளின் போதும் ஒவ்வொரு பீடத்திற்கும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பட்டங்களைப் பெற்று வெளியேறிச் சென்றிருந்த மாணவர்களின் எண்ணிக்கை என்பன கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| பீடங்கள் | பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | | | பட்டங்களைப் பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|
| | 2014 | 2013 | 2012 | 2014 | 2013 | 2012 |
| பிரயோக விஞ்ஞானம் | 197 | 243 | 273 | 63 | 33 | 43 |
| கலை மற்றும் கலாச்சாரம் | 241 | 418 | 128 | 149 | 134 | 179 |
| முகாமைத்துவமும் வர்த்தகமும் | 329 | 376 | 354 | 158 | 167 | 106 |
| இஸ்லாமிய மற்றும் அரபு மொழி | 340 | 231 | 261 | 145 | 107 | 88 |
| பொறியியல் | 101 | 102 | - | - | - | - |
| மொத்தம் | 1,208 | 1,370 | 1,016 | 515 | 441 | 416 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இஸ்லாமிய மற்றும் அரபு மொழி பீடத்திற்கு மீளாய்வாண்டில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை 47 சதவீதத்தினால் அதிகரித்திருந்த அதேவேளை பிரயோக விஞ்ஞான பீடத்திற்கும் முகாமைத்துவ வர்த்தக பீடத்திற்கும் கலை மற்றும் கலாச்சார பீடத்திற்கும் மீளாய்வாண்டில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை முறையே 19.0 சதவீதத்தினாலும் 12.5 சதவீதத்தினாலும் 42 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்தன.

#### (ஆ) மாணவரொருவருக்கான கிரயம்

மீளாய்வாண்டிற்கான பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடத்தினதும் மொத்தக் கிரயம் மற்றும் மாணவரொருவருக்கான கிரயம் என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

| | பிரயோக விஞ்ஞான பீடம் | கலை மற்றும் கலாச்சார பீடம் | இஸ்லாமிய மற்றும் அரபு மொழி பீடம் | முகாமைத்துவ மற்றும் வர்த்தக பீடம் | பொறியியல் பீடம் | மொத் தம் |
|---|---|---|---|---|---|---|
| மொத்தக் கிரயம் (ரூபா 000) | 88,474 | 74,407 | 36,624 | 68,956 | 31,683 | 300,144 |
| மாணவர்களின் மொத்த எண்ணிக்கை | 459 | 806 | 744 | 1,024 | 194 | 3,227 |
| மாணவரொருவருக்கான கிரயம் (ரூபா 000) | 193 | 92 | 49 | 67 | 163 | 93 |

மாணவரொருவருக்கான அதிகூடிய கிரயமான ரூபா 193,000 பிரயோக விஞ்ஞான பீடத்தில் அறிவிக்கப்பட்டிருக்கையில் ஆகக் குறைந்த மாணவரொருவருக்கான கிரயமான ரூபா 49,000 இஸ்லாமிய மற்றும் அரபு மொழி பீடத்தில் அறிவிக்கப்பட்டிருந்தது.

**4.2 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது பின்வரும் வினைத்திறனின்மைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 சனவரி 10 ஆந் திகதியன்று பிணைமுறியின் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்திருந்த போதிலும், உடன்படிக்கையினை முறித்துக்கொண்டமைக்காக விரிவுரையாளரிடமிருந்து ரூபா 8,942,758 தொகையினை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கூட பல்கலைக்கழகம் முறையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இந்த விடயம் 2013 ஆம் ஆண்டிற்காக வழங்கப்பட்ட எனது கணக்காய்வு அறிக்கையிலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2010 சனவரி 22 ஆந் திகதி முதல் பதவி வறிதாக்கப்பட்டிருந்த சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவருடன் தொடர்புடைய ரூபா 1,581,737 தொகை இது வரை நிலுவையாக உள்ளது. இருப்பினும், இத் தொகையினை அவரது பிணைதாரரிடமிருந்து அறவிடுவதற்கு அல்லது அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கையினை எடுப்பதற்கு பல்கலைக்கழகம் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை. இந்த விடயம் முன்னைய ஆண்டிற்காக வழங்கப்பட்ட எனது கணக்காய்வு அறிக்கையிலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

(இ) 2004 ஆம் ஆண்டில் உடன்படிக்கையினை முறித்துக் கொண்டமைக்கான பிணை முறிப் பெறுமதியாக ரூபா 1,686,896 தொகையினை விரிவுரையாளர் ஒருவரிடமிருந்து 2014 ஆம் ஆண்டின் இறுதியளவில் அறவிட வேண்டியிருந்தது. இருப்பினும், பல்கலைக்கழகம் 09 ஆண்டுகள் தாமதத்தின் பின்னர் 2013 ஆம் ஆண்டிலேயே இத்தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. ஆகையால், குறித்த விரிவுரையாளர் பிணை முறிப் பெறுமதியினை அறிவிடுவதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்றை தொடர்ந்திருந்ததுடன் அவர் இலங்கைக்கு திரும்பிவந்த பின்னர் ஆறு ஆண்டுகளிற்கும் மேல் தாமதித்து அறவிடுவதற்காக நடவடிக்கை எடுத்திருந்தமைக்காக விரிவுரையாளரிடமிருந்து அறவிடப்பட்ட அவ்வாறான தொகையினை திருப்பிச் செலுத்துமாறு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது. இது தொடர்பில் குறித்த விரிவுரையாளருக்கு கடிதத்தினை வழங்குவதற்கு தாமதம் செய்திருந்த உத்தியோகத்தருக்கு எதிராக பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அறவீடுகளிற்குப் பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தரின் கவனயீனம் காரணமாக பல்கலைகழகத்திற்கு ரூபா 1,731,146 இழப்பு ஏற்பட்டிருந்தது.

(ஈ) நலன்புரி சிற்றுண்டிச்சாலையில் பயன்படுத்தவதற்காக 2013 ஆம் ஆண்டில் ரூபா 474,400 பெறுமதியுடைய வெப்ப பெட்டகம் மற்றும் உயர் குளிரூட்டி என்பவற்றை

பல்கலைக்கழகம் கொள்வனவு செய்திருந்ததுடன், இப் பொருட்கள் மிக அவசரத் தேவையெனக் கருதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இருப்பினும், இப் பொருட்கள் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாது கணக்காய்வுத் திகதியான 2015 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை நலன்புரி சிற்றுண்டிச்சாலையில் பயனற்றிருந்தன.

(உ) 1992 சனவரி 02 ஆந் திகதிய 503 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் சிரேஷ்ட மாணவ ஆலோசகர்கள் மற்றும் மாணவ ஆலோசகர்கள் முறையே ரூபா 500 மற்றும் ரூபா 300 மாதாந்த கௌரவ படிக்கு உரித்துடையவர்களாவர். இருப்பினும், சிரேஷ்ட மாணவ ஆலோசகர்கள் மற்றும் மாணவ ஆலோசகர்களிற்கு அவர்களது அடிப்படைச் சம்பளத்தில் முறையே 15 சதவீதம் மற்றும் 10 சதவீதத்தினை கௌரவ படியாக பல்கலைக்கழகம் செலுத்தியிருந்தது. அதன் விளைவாக, இரண்டு சிரேஷ்ட மாணவ ஆலோசகர்கள் மற்றும் ஒன்பது மாணவ ஆலோசகர்களிற்கு கௌரவ படியாக ரூபா 430,907 தொகையினை பல்கலைக்கழகம் மீளாய்வாண்டில் மேலதிகமாகச் செலுத்தியிருந்தது.

(ஊ) மாணவர் விடுதிகளிற்காக மெத்தைகளைக் கொள்வனவு செய்தல்

ரூபா 3,140,000 மொத்தக் கிரயம் கொண்ட 800 மெத்தைகளை மீளாய்வாண்டில் பல்கலைக்கழகம் கொள்வனவு செய்திருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கபட்டன.

(i) கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாகவிருந்த தகவல்களின் படி, மெத்தைகளைக் கொள்வனவு செய்வதற்கான கூறுவிலைகளைக் கோருவதற்கு பல்கலைக்கழகம் மஞ்சள் பக்கங்களை பயன்படுத்தியிருந்தது. இருப்பினும், பல்கலைக்கழக உப வேந்தரின் கோரிக்கைக்கு அமைய மஞ்சள் பக்கங்களில் பெயர் காணப்படாத வழங்குனர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

(ii) எந்தவொரு ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணமுமின்றி நான்கு கேள்விதாரர்களின் குறைவான கூறுவிலைகளை பல்கலைக்கழகம் நிராகரித்திருந்தது. அதேவேளை, கூடிய கூறுவிலைகளைச் சமர்ப்பித்திருந்த வழங்குனருக்கு பல்கலைக்கழகம் ஒப்பந்தத்தினை கையளித்திருந்தது. குறைவான கூறுவிலையினைச் சமர்ப்பித்திருந்த கேள்விதாரர்களிற்கு பல்கலைக்கழகம் ஒப்பந்தத்தினைக் கையளித்திருப்பின் இந்தக் கொள்வனவிலிருந்து பல்கலைக்கழகம் ரூபா 1,064,864 தொகையினை சேமித்திருக்க முடிந்திருக்கும்.

(iii) மெத்தைகளைக் கொள்வனவு செய்வதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த வழங்குனர் மெத்தைகளையல்லாது பஞ்சினை (“ஸ்பொன்ச்”) உற்பத்தி செய்து விநியோகிப்பவராக காணப்பட்டார்.

(iv) தெரிவு செய்யப்பட்ட வழங்குனரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த மெத்தைகளின் அளவுகள் கட்டில்களின் அளவினைக் காட்டிலும் குறைவாகக் காணப்பட்டன. ஆகையால், தேவையான அளவிற்கு மெத்தைகளின் நீளத்தை அதிகரிப்பதற்கு பல்கலைக்கழகத்திற்கு ரூபா 180,000 தொகையினை மேலதிகமாக செலவிடவேண்டி ஏற்பட்டிருந்தது.

(v) மெத்தைகளின் தரம் மற்றும் பாவனைக் காலத்தினைக் கருத்திற்கொள்ளாது இந்த மெத்தைகளைக் கொள்வனவு செய்வதற்காக பல்கலைக்கழகம் குறிப்பிடத்தக்களவு பணத்தினை செலவிட்டிருந்தது. வழங்குனரால் மெத்தைகளிற்குப் பயன்படுத்தியிருந்த பொருட்களின் தரம் மெத்தைகளாக பயன்படுத்துவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவையாக

காணப்பட்டமையால் எதிர்காலத்தில் மாணவர்களின் ஆரோக்கியத்திற்கு இந்த மெத்தைகள் பாதிப்பு செலுத்தும் என மேலும் அவதானிக்கப்பட்டது.

(எ) பிரதான பொருட்பதிவேடு மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேடு என்பவற்றைத் தயாரிப்பதற்காக கௌரவ படி செலுத்துதல்

---

மேற்படி பதிவேடுகளைத் தயாரிப்பதற்காக பல்கலைக்கழகத்தின் கல்விசாராத பதவியணியினர் மற்றும் 03 மன்ற உறுப்பினர்களிற்கு கௌரவ படியாக ரூபா 1,356,000 தொகையினை பல்கலைக்கழகம் செலுத்தியிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பொருட்பதிவேடு மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேடு என்பவற்றைத் தயாரித்தல் பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாக மற்றும் நிதிப் பிரிவுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் கடமைகளில் ஒரு பகுதியாகவும் நிறைவேற்றப்பட வேண்டிய பணியாகவும் காணப்பட்ட போதிலும், இப் பதிவேடுகளை அலுவலக கடமை நேரத்தில் தயாரிப்பதற்கான கௌரவ படியாக நிர்வாக மற்றும் நிதிப் பிரிவுகளிற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள 10 உத்தியோகத்தர்களிற்கு ரூபா 756,000 செலுத்தப்பட்டிருந்தது.

(ii) இப் பதிவேடுகளைத் தயாரிப்பதில் அவர்களது ஈடுபாட்டிற்கான ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய காரணங்களைக் குறிப்பிடாது பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் மற்றும் பதிவாளர் ஆகியோர் கௌரவப் படியாக ரூபா 300,000 மொத்தத் தொகையினை பெற்றிருந்தனர்.

(ஏ) வெளிவாரிப் பட்டங்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளிற்கான நிலையத்தின் செயற்பாடுகள் (சீஈடீபிஎல்)

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 ஒக்தோபர் 15 ஆந் திகதிய 932 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், சீஈடீபிஎல் இன் முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட ஒரு உறுப்பினர் அடங்கலாக 12 உறுப்பினர்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். இருப்பினும், சீஈடீபிஎல் இன் முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட உறுப்பினர் ஒருவரை உள்ளடக்கியிருக்கவில்லை.

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணக்கப்பாடின்றி ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு அமர்விற்கு ரூபா 2,000 வீதம் செலுத்தியிருந்த ரூபா 50,000 மொத்தமான அமர்வுப் படிகளிற்கு மேலதிகமாக சீஈடீபிஎல் இன் 07 முகாமைத்துவக் குழு உறுப்பினர்களிற்கு மாதாந்த அடிப்படையில் கௌரவப் படியாக ரூபா 654,000 கூட்டுத்தொகை மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) பல்கலைக்கழகம் சீஈடீபிஎல் இன் கணனி ஆய்வு கூடத்திற்கு 2013 ஆம் ஆண்டில் ரூபா 2,817,200 பெறுமதியான 24 கணனிகளைக் கொள்வனவு செய்திருந்தது. இருப்பினும், அந்த 24 கணனிகளில் 14 கணனிகள் பல்கலைக்கழகத்தின் ஏனைய பிரிவுகளிற்கு விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் எஞ்சிய 10 கணனிகளில் எந்தவொரு கணனியும் கணனி ஆய்வுகூடத்திற்கு வழங்கப்படாது கணக்காய்வுத் திகதியான 2015 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை களஞ்சியத்தில் பயனற்றிருந்தன.

(ஐ) கட்டிடத்திற்காக குத்தகை செலுத்துதல்

பல்கலைக்கழகத்தின் பதவியணியினருக்கு தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக 2014 யூன் 06 ஆந் திகதி முதல் 18 மாத காலத்திற்கு ரூபா 120,000 மாதாந்த குத்தகைக்கு இரத்மலானையில் அமைந்துள்ள கட்டிடமொன்றை பல்கலைக்கழகம் எடுத்திருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப் பிரமாணம் 835 இன் படி விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் பிரதம மதிப்பீட்டாளரிடமிருந்து மதிப்பீட்டு அறிக்கையொன்றை பெற்றுக்கொள்ளாது குத்தகையளிப்போருடன் கைச்சாத்திடப்பட்ட குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 120,000 மாதாந்த குத்தகை நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

(ii) குத்தகை உடன்படிக்கை 2014 யூன் 06 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்தது. இருப்பினும், உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட திகதியன்றே குத்தகையளிப்போனுக்கு ரூபா 2,160,000 முழு குத்தகை தொகையும் முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது.

(iii) குத்தகை உடன்படிக்கை 2014 யூன் 06 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், இந்த குத்தகை உடன்படிக்கை ஆவணங்கள் பதிவுக் கட்டளைச்சட்டத்தின் 135 ஆம் அத்தியாயத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் காணிப் பதிவு பதிவாளரிடம் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

**4.3 சர்ச்சைக்குரிய தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னாள் சனாதிபதி மஹிந்த இராஜபக்ஷ அவர்களின் பிறந்த தினக் கொண்டாட்டத்திற்காக 2014 நவம்பர் 19 ஆந் திகதி பல்கலைக்கழகம் செய்திப்பத்திரிகைகளில் வாழ்த்துக்களை பிரசுரித்திருந்தது. இது தொடர்பில் ரூபா 221,200 தொகை பல்கலைக்கழக நிதியத்திலிருந்து மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) முன்னாள் சனாதிபதியினை வரவேற்பதற்காக பல்கலைக்கழகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த விழாவிற்குப் பயன்படுத்தவதற்காக 2014 ஏப்ரல் 21 ஆந் திகதி பல்கலைக்கழகம் ரூபா 1,099,240 செலவில் சிவப்பு நிற கம்பளத்தினைக் கொள்வனவு செய்திருந்தது. இருப்பினும் இது குறித்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படாது கணக்காய்வுத் திகதியான 2015 ஏப்ரல் 30 வரை பயனற்றிருந்தது.

(இ) முன்னாள் சனாதிபதி மற்றும் அமைச்சர்களை வரவேற்பதற்காக பல்கலைக்கழகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த விழாவின் போது விருந்துபசாரம் வழங்குவதற்காக ரூபா 1,016,935 தொகையான குறிப்பிடத்தக்களவு நிதியை பல்கலைக்கழகம் செலவிட்டிருந்தது. இருப்பினும், விழாவிற்குப் பங்கேற்ற நபர்களின் எண்ணிக்கை, பாதீட்டு மதிப்பீடு போன்ற தேவையான தகவல்கள் கிடைக்காமை காரணமாக இச் செலவினத்தை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

### 4.4 ஒப்பந்த நிர்வாகம்

#### 4.4.1 ஆய்வுகூட உபகரணக் கொள்வனவு

பிரயோக விஞ்ஞான பீடத்தில் ஆய்வுகூட உபகரணங்களாக பயன்படுத்துவதற்கு போர்டபிள் லீவ் ஏரியா மீற்றர் (Portable Leaf Area Meter) இனைக் கொள்வனவு செய்வதற்காக ஆறு வழங்குனர்களிடமிருந்து பல்கலைக்கழகம் கூறு விலைகளைக் கோரியிருந்ததுடன் ரூபா 1,064,000 குறைந்த கூறுவிலையாகக் காணப்பட்டது. இருப்பினும், குறைந்த கூறுவிலைகளை நிராகரித்தமைக்கான ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய காரணங்களைக் குறிப்பிடாது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு உயர்ந்த கூறுவிலையான ரூபா 2,183,500 தொகையினை பரிந்துரைத்திருந்தது. அதன் விளைவாக, இந்த உபகரணங்களின் கொள்வனவிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு ரூபா 1,119,500 நட்டம் ஏற்பட்டிருந்தது.

#### 4.4.2 உள்ளக வீதியினை மேம்படுத்தல்

பிரதான வீதியிலிருந்து பல்கலைக்கழகத்தின் 07 ஆம் இலக்க காவல் நிலையம் வரையான உள்ளக வீதியினை மேம்படுத்தவதற்காக ரூபா 43,675,676 பெறுமதியான ஒப்பந்தமொன்றை பல்கலைக்கழகம் வழங்கியிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மேற்குறிப்பிட்ட வீதி கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் ரூபா 10,944,641 செலவில் 2011 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், இவ்வீதியின் நிர்மாண ஒப்பந்தம் அவ்வாறு செய்வதற்கான தேவையெதுவுமின்றி 2014 இல் ரூபா 43,675,676 ஒப்பந்த விலையில் மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்திற்கு (சீஈசீபீ) மீளக் கையளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இதே காலப்பகுதியில் பிரதான வீதியிலிருந்து பல்கலைக்கழகத்தின் காவல் நிலையம் வரை புனரமைக்கப்பட வேண்டிய மற்றுமொரு வீதியின் நிர்மாண ஒப்பந்தத்தினை பல்கலைக்கழகம் சீஈசீபீ இற்குக் கையளித்திருந்தது. எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட இரண்டு வீதிகளிற்கும் அடிப்படைப் பொருட்களின் போக்குவரத்துடன் ஏபீசீ கற்களை வழங்கி பதிப்பது தொடர்பான ஒத்த வேலை விடயங்களிற்காக சீஈசீபீ இரண்டு வேறுபட்ட விலைகளை பிரயோகித்திருந்தது. அதன்படி, பிரதான வீதியிலிருந்து காவல் நிலையம் வரையான உள்ளக வீதியினை புனரமைப்பதற்கான ஒப்பந்தத்திற்கு ரூபா 380,256 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(இ) காவல் நிலையம் வரையான உள்ளக வீதியின் புனரமைப்பு 2014 இல் பூரணப்படுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 43,675,676 முழு ஒப்பந்தத் தொகையும் ஒப்பந்தகாரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும். அவர்களால் பூரணப்படுத்தப்பட்ட மிகையான வேலைகளிற்காக ரூபா 7,418,160 மேலதிக தொகையினை ஒப்பந்தகாரர் கோரியிருந்தார். கொள்வனவுச் சபையின் அங்கீகாரமின்றி அவ்வாறான மிகை வேலைகளிற்காக பல்கலைக்கழகம் கொடுப்பனவு செய்திருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) ஒப்பந்த உடன்படிக்கையின் படி, 2014 யூன் 30 ஆந் திகதிக்கு முன்னர் நிர்மாண வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். இருப்பினும், அவை 2014 யூலை 31 ஆந் திகதியன்றே பூரணப்படுத்தப்பட்டிருந்தன. இது தொடர்பில் ரூபா 592,585 தொகை ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணமாக ஒப்பந்தகாரரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 4.4.3 பிரயோக விஞ்ஞான பீடத்தில் மாணவர் விடுதியினையும் பதவியணியினர் வதிவிடங்களையும் நிர்மாணித்தல்

---

மாணவர் விடுதி மற்றும் பதவியணியினர் இல்லங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 92,508,979 பெறுமதியான ஒப்பந்தமொன்றை 2011 நவம்பர் 01 ஆந் திகதி பல்கலைக்கழகம் கையளித்திருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இப்பிரதேசத்தில் தங்குமிட வசதிகளை பெற்றுக்கொள்வதில் மாணவர்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளமையால் இந்த விடுதிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு பல்கலைக்கழகம் முன்னுரிமை வழங்கியிருந்தது. ஆகையால், இரண்டு ஆண்டுகளிற்குள் இக் கட்டிடங்களின் நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்வதற்கு அமைச்சரவையும் அங்கீகாரம் வழங்கியிருந்தது. எவ்வாறாயினும், ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களின்றி பல்கலைக்கழகம் 2014 ஆகஸ்ட் 31 வரை ஐந்து தடவைகள் காலநீடிப்பு வழங்கியிருந்ததுடன் ஒப்பந்தகாரருக்கு எதிராக முறையான நடவடிக்கை எடுப்பதற்கு தவறியிருந்தது.

(ஆ) 2012 திசெம்பர் 17 இல் அல்லது அதற்கு முன்னர் நிர்மாண வேலைகள் பூரணப்படுத்தப்பட வேண்டிய போதிலும், 2014 ஆகஸ்ட் 31 வரை ஐந்து தடவைகள் காலநீடிப்புச் செய்யப்பட்ட பின்னரும் 60 சதவீதமான வேலைகளே பூரணப்படுத்தப்பட்டிருந்தன. மேலும், வேலைகள் பூரணப்படுத்தப்பட வேண்டிய திகதியின் பின்னர் ஏற்பட்ட விலை அதிகரிப்புக்களிற்காக விலை வேறுபாடுகள் என ரூபா 7,091,312 தொகையினை ஒப்பந்தகாரருக்கு பல்கலைக்கழகம் செலுத்தியிருந்தது.

(இ) பல்கலைக்கழகத்திற்கும் ஒப்பந்தகாரருக்கும் இடையே கைச்சாத்திடப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம், ஒப்பந்தகாரருக்கு சிட்டைகளின் கொடுப்பனவு தாமதத்திற்காக தண்டப்பணம் செலுத்துதல் தொடர்பான எந்த நிபந்தனையும் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், ஒப்பந்தகாரருக்கு கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் ஏற்பட்ட தாமதத்திற்காக ரூபா 1,206,460 தொகையினை பல்கலைக்கழகம் ஒப்பந்தகாரருக்குச் செலுத்தியிருந்தது.

(ஈ) ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், ஆரம்ப ஒப்பந்த விலையில் நாளொன்றுக்கு 0.05 சதவீதம் என்ற அடிப்படையில் ஆரம்ப ஒப்பந்த விலையில் 10 சதவீத உச்சத்திற்கு உட்பட்டு தாமதக் கட்டணம் அறவிடப்படுதல் வேண்டும். இருப்பினும், ஒப்பந்தகாரரிடமிருந்து ரூபா 9,158,389 தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. ஒப்பந்தகாரரால் வழங்கப்பட்ட ஏற்றுக்கொள்ள முடியாத காரணங்களிற்காக பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட காலநீடிப்பைக் கருத்திற்கொள்ளாது வேலைகள் பூரணப்படுத்தப்பட வேண்டிய திகதியிலிருந்து தாமதக் கட்டணத் தொகை கணிப்பிடப்பட்டிருப்பின், தாமதக் கட்டணத் தொகை ரூபா 39,964,320 ஆக இருந்திருக்கும்.

(உ) ஒப்பந்தகாரரை தெரிவு செய்தல் ஒப்பந்தகாரரின் இயலுமை மற்றும் கடந்தகால அனுபவத்தினை முறையாக மதிப்பிடாது மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் வேலைகள் பூரணப்படுத்தப்பட வேண்டிய திகதியிலிருந்து மூன்று ஆண்டுகள் கடந்த பின்னரும் நிர்மாண வேலைகளை பூரணப்படுத்துவதற்கு ஒப்பந்தகாரருக்கு முடியாது போயிருந்தது. ஆகையால், 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் பல்கலைக்கழக மாணவர்களிற்கு தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக வாடகைக்கு எடுக்கப்பட்ட கட்டிடங்களிற்கு ரூபா 4,929,250 தொகையினை பல்கலைக்கழகம் வாடகையாக செலுத்த வேண்டியிருந்தது.

### 4.5 மனித வள முகாமைத்துவம்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியாளர் பதவி 2013 திசெம்பர் 15 முதல் வெற்றிடமாகக் காணப்படுகின்றது. இருப்பினும், இப்பதவிக்கு தகைமையுள்ள உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு 2015 ஏப்ரல் 30 வரை பல்கலைக்கழகம் பயனுள்ள நடவடிக்கை எதனையும் எடுத்திருக்கவில்லை.

(ஆ) கடந்த பல ஆண்டுகளாக அநேக பீடங்களில் பேராசிரியர்கள் மற்றும் இணைந்த பேராசிரியர்களின் பதவிகளில் காணப்பட்ட எட்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கு பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 1997 நவம்பர் 21 ஆந் திகதிய 721 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், சிரேஷ்ட விரிவுரையாளர் பதவிகளிற்கான ஆட்சேர்த்தல் திறந்த விளம்பரங்களின் ஊடாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அந்த தேவைப்பாட்டிற்கு முரணாக, தற்காலிக உதவி விரிவுரையாளர்களாக கடமையாற்றிய ஒன்பது உத்தியோகத்தர்கள் சிரேஷ்ட விரிவுரையாளர்களாக பதவியுயர்த்தப்பட்டிருந்தனர்.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழக உப வேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) கடன்கள் மற்றும் முற்பணைங்களின் அறவீடு
(இ) நிலையான சொத்துக்கள் மீதான கட்டுப்பாடு
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்
(உ) மனிதவள முகாமைத்துவம்